DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.குணசேகரன் | Father/Husband Name : சுப்பையா |
| Age : 50 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : கிராம நிர்வாக அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Dec 26, 2025 12:42 PM

(Accused not Present. Petition under Section 317 CrPC filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் சாத்தூர் தாலுகா ஓ.மேட்டுப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 15.03.2014 ம் தேதி படந்தால் கிராம நிர்வாக அலுவலகராக கூடுதல் பொறுப்பில் இருந்தேன். 14.03.2014 ம் தேதி இரவு 09.00 மணியளவில் வருவாய் ஆய்வாளர் திரு.ரவிச்சந்திரன் என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மணல் திருட்டு சம்பந்தமாக ரோந்து செல்லவேண்டியிருப்பதாக கூறி என்னை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருமாறு கூறினார். இரவு 12.00 மணியளவில் நான் வருவாய் ஆய்வாளர் ரவிச்சந்திரன் மற்றும் கிராம உதவியாளர் முனியாண்டி ஆகியோர் காவல் உதவி ஆய்வாளர் பெருமாள் சாமி, காவலர் ராஜமாணிக்கம் ஆகியோர் சேர்ந்து மணல் திருட்டு தொடர்பாக ரோந்து பணிக்கு சென்றோம்.

3. நாங்கள் படந்தால் அரசு பள்ளி அருகே வாகனத்தை நிறுத்திவிட்டு ஆற்றுப்பகுதியில் ரோந்துக்காக நடந்து சென்றோம். நாங்கள் அதிகாலை சுமார் 03:45 மணி அளவில் வாகனத்தை எடுத்துக்கொண்டு ரெங்கப்பன் நாயக்கன்பட்டி சாலை வழியாக ரோந்து பணிக்கு சென்றோம். அப்பொழுது தெற்கு இருந்து வடக்கு நோக்கி (பிரதான சாலையை நோக்கி), TN 22 J 7799 என்ற பதிவெண் கொண்ட MMM என்று எழுதப்பட்டிருந்த மணல் லாரி ஒன்று அனுமான் நகரில் வந்து கொண்டிருந்தது. அதை வருவாய் ஆய்வாளர் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் ஆகியோர் சேர்ந்து மறித்த போது அந்த வாகனத்தை சிவகாசியை சார்ந்த முனியாண்டி என்பவர் ஓட்டி வந்தார். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும்.

4. அந்த லாரியில் சுமார் 1 1/2 யூனிட் அளவுள்ள ஆற்று மணல் இருந்தது. அந்த மணலுக்கான அனுமதி சீட்டு லாரியில் இல்லை. லாரி மற்றும் அதை ஓட்டி வந்த முனியாண்டி ஆகியோரை லாரியில் இருந்த மணலுடன் சாத்தூர் நகர் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம். அனுமதி சீட்டு இல்லாமல் மணல் எடுத்து வந்ததற்காக வருவாய் ஆய்வாளர் புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**நீதிமன்ற கேள்வி:** லாரியை மறித்ததாக கூறும் இடத்தில் வைத்து அத்தாட்சி எதுவும் தயார் செய்யப்பட்டதா

**பதில்:** இல்லை லாரியை நேராக காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து விட்டார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

5. வருவாய் ஆய்வாளர் கொடுத்த புகார் மனுவில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் காவல் ஆய்வாளர் கருப்பசாமி பாண்டியன் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன். படந்தால் கிராம நிர்வாக அலுவலர் எந்த தேதியில் விடுமுறையில் சென்றார் என்றால் 15 மற்றும் 16 ஆகிய இரண்டு தேதிகளில் அவர் விடுப்பில் சென்றார். வருவாய் ஆய்வாளர் எனக்கு போன் செய்யும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு சுமார் 09.00 மணி இருக்கும். 14.03.2014 ஆம் தேதி படந்தால் கிராம நிர்வாக அலுவலர் பணியில் இருந்தார் என்றால் சரிதான், அன்று பணியை முடித்துவிட்டு அவர் சென்று விட்டார். கிராம நிர்வாக அலுவலர் பணி என்பது 24.00 மணி நேர பணி என்றால் சரிதான்.

6. சாத்தூர் – படந்தால் சாலை கிழமேல் சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் இருந்து எவ்வளவு தூரத்தில் ஆற்றுக்குள் போகக்கூடிய பாதை இருக்கிறது என்றால் சுமார் 500 மீட்டர் தொலைவில் இருக்கிறது. அனுமான் நகரில் ஆற்றுக்குள் போகக்கூடிய பகுதியில் குடியிருப்பு வீடுகள் இருக்கிறது என்றால் சரிதான். நாங்கள் ரோந்து பணிக்கு சென்றதாக கூறும் வைப்பார் கிழமேலாக செல்கிறது என்றால் சரிதான். நாங்கள் அந்த ஆற்றுக்கு எந்த பக்கம் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் தெற்கு பக்கம் சென்றோம். நாங்கள் எவ்வளவு தூரம் ஆற்றுக்குள் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் சுமார் 500 மீட்டர் தொலைவு நடந்து சென்றோம். நாங்கள் எங்களுடைய வாகனத்தை ஆற்றுக்கு வடக்கு பக்கம் உள்ள அனுமான் நகரில் நிறுத்திவிட்டு ஆறு வழியாக நடந்து தெற்கு பக்கம் சென்றோமா என்றால் நாங்கள் அனுமான் நகருக்குள் செல்லவில்லை, பிரதான சாலையில் வாகனத்தை நிறுத்திவிட்டு ரோந்து பணிக்கு சென்றோம், ஆற்றுக்கு தெற்கு பக்கம் ரோந்து பணியில் நாங்கள் ஈடுபடவில்லை.

7. நாங்கள் வாகனத்தை நிறுத்தியதாக கூறும் படந்தால் அரசு பள்ளி இருக்கக்கூடிய அனுமான் நகர் படந்தால் ஊரின் விரிவாக்கப்பட்ட பகுதி என்றால் சரிதான். முதலில் யார் லாரியை பார்த்தோம் என்றால் அனைவரும் சேர்ந்து பார்த்தோம். நாங்கள் பார்த்ததாக கூறும் லாரி முழுவதுமாக மணல் இருந்தது என்றால் சரிதான். அந்த லாரியில் 3 யூனிட் மணல் பிடிக்கும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். லாரியை நிறுத்தியதாக கூறும் இடத்தில் நாங்கள் எவ்வளவு நேரம் இருந்திருக்கும் என்றால் சுமார் 15 நிமிடங்கள் இருந்திருப்போம். அந்த இடத்தில் எதிரியை காவல் உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். அந்த இடத்தில் வைத்து என்னிடமோ அல்லது வருவாய் ஆய்வாளரிடமும் காவல் உதவி ஆய்வாளர் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

8. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் லாரியை பிடித்த அன்றைய தினம் விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தபோது 14.03.2014 ஆம் தேதி இரவு 09.00 மணிக்கு வருவாய் ஆய்வாளர் எனக்கு போன் செய்து மணல் திருட்டு தொடர்பாக ரோந்து பணிக்கு செல்ல வேண்டும் என்று கூறி என்னை அவருடைய அலுவலகத்திற்கு வரக் கூறியதாக நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதியை கூறினேனா என்றால் கூறினேன். அதேபோல், போலீசார் என்னை விசாரணை செய்தபோது படந்தால் அரசு பள்ளி அருகே இரவு 12.00 மணிக்கு எங்களுடைய

வாகனத்தை நிறுத்திவிட்டு ரோந்து பணிக்கு சென்றோம் என்ற விபரத்தை கூறினேனா என்றால் கூறினேன். மணல் ஏற்றி வந்ததாக கூறும் லாரி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது என்று அளித்துள்ள சாட்சியத்தை கூறினேனா என்றால் கூறினேன். நான் வருவாய் ஆய்வாளர் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆகியோர் ரோந்து பணிக்கு சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9. லாரி மணல் ஏற்றி வந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், மணல் எதுவும் ஏற்றி வரவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Dec 26, 2025 1:04 PM

Judicial Magistrate 2, Sattur.